# சாமி அருணகிரி நாதருக்கு 1 வருடக் கடுங்காவல்.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூலை. 8

இன்று பிற்பகல் எழும்பூர் 3-வது மாகாண மாஜிஸ்திரேட் தோழர் மாதவராவ் அவர்கள் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகக் கைதியான சென்னை சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் இ. பி. கோ 117-வது செக்ஷன் படியும் கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டத்தின் 7-1 a உட்பிரிவின்படியும் குற்றவாளி எனத் தீர்மானித்து ஒவ்வொரு குற்றத்திற்கும் 1 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்து, இருதண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமெனத் தண்டனை யளித்தார்.

பாரிஸ்டர் ரங்கராமானுஜ முதலியார் எழுந்து எதிரி கண்ணியமுள்ளவரென்றும், பொது ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவரென்றும் அவரை ஏ. வகுப்புக் கைதியாக நடத்தவேண்டுமென்று கோரியதற்கு மாஜிஸ்திரேட் இணங்கவில்லை. பி. வகுப்பிலாவது சேர்க்கவேண்டுமென்று பாரிஸ்டர் கோரியதற்கு மாஜிஸ்திரேட் தான் அதைப் பற்றி ஆலோசிப்பதாகக் கூறினார்.